# COVID-19 தடுப்புமருந்துகள் யாரில் பரிசோதித்துப் பார்க்கப்பட்டன?

ஏப்ரல் 14, 2021

பயன்படுத்தப்படுவதற்காகத் தடுப்புமருந்து ஒன்றை அங்கீகரிப்பதற்கு முன்பு, அது செயற்படுகிறது மற்றும் பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஏராளமானவர்களில் அது பரிசோதித்துப் பார்க்கப்படுகிறது. இவை மருத்துவப் பரிசோதனைகள் என்று அழைக்கப்படுகின்றன. COVID-19 தடுப்புமருந்துகளைப் பரிசோதித்த விஞ்ஞானிகள், இனக்குழுரீதியாக மற்றும் இனரீதியாக வேறுபட்டவர்கள் உள்ளடங்கலான பலதரப்பட்ட மக்களைத் தங்களின் ஆய்வுகளில் உள்ளடக்கியிருந்தனர்.

## ஏன் பல்வேறு பின்புலங்களைச் சேர்ந்தவர்களில் அந்தத் தடுப்புமருந்துகள் பரிசோதிக்கப்பட்டன?

தடுப்புமருந்துகளைப் பெற்றுக்கொள்ளவிருக்கும் அனைத்து வகையான மக்களினதும் தன்னார்வலப் பிரதிநிதிகளை தடுப்புமருந்து ஆய்வுகள் உள்ளடக்கியிருப்பது முக்கியமாகும். ஆரோக்கியப் பராமரிப்பு, வருமானம், கல்வி, வேலைகள், பாதுகாப்பான குடியிருப்புவசதி ஆகியவற்றை அணுகுவதற்கான தடைகள் போன்ற காரணங்களால், COVID-19 ஆல் நோய்வாய்ப்படும் மற்றும் இறக்கும் அபாயம் வெள்ளையினத்தவர் அல்லாதவர்களுக்கு அதிகமாக இருக்கிறது என்பது COVID-19 தடுப்புமருந்துகளைப் பரிசோதித்த விஞ்ஞானிகளுக்குத் தெரிந்திருந்தது. எனவே, தங்களின் ஆய்வில் வெள்ளையினத்தவர் அல்லாதவர்களைச் சேர்ப்பதற்கான திட்டமிட்டு முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர். COVID-19 இலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பை இது அனைவருக்கும் வழங்கும்.

## இந்தத் தடுப்புமருந்து ஆய்வுகளில் பங்கேற்ற மக்கள் எவ்வளவுதூரம் பரந்துபட்டவர்களாக இருந்தனர்?

COVID-19 தடுப்புமருந்துகளை (தற்போது கனடாவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளவை) இனக்குழுரீதியாக மற்றும் இனரீதியாக வேறுபட்ட ஆயிரக்கணக்கான மக்களில் விஞ்ஞானிகள் பரிசோதித்தனர். இந்த அட்டவணை மக்கள் எவ்வளவுதூரம் பரந்துபட்டவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டுகிறது.

| இனக்குழுரீதியாக மற்றும் இனரீதியான பின்புலத்தைத் தாமாக அடையாளப்படுத்தியோர்** | Moderna தடுப்புமருந்து | Pfizer-BioNTech தடுப்புமருந்து | Johnson and Johnson தடுப்புமருந்து | AstraZeneca தடுப்புமருந்து |
|---|---|---|---|---|
| வெள்ளையினத்தவர் | 79% | 83% | 62% | 79% |
| கறுப்பினத்தவர் அல்லது ஆபிரிக்க அமெரிக்கர் | 10% | 9% | 17% | 8% |
| ஆசியர் | 5% | 4% | 4% | 4% |
| முதல்குடியினர் (“அமெரிக்கன் இந்தியர்” அல்லது “Alaska ஆதிக்குடிகள்”) | 0.8% | 0.5% | 8% | 4% |
| ஆதிக்குடி Hawaiian அல்லது பசுபிக் சமுத்திரப்பகுதிகளில் வசிப்போர் | 0.2% | 0.2% | 0.3% | -- |
| பல்வேறு இனங்களின் கலப்பினர் | 2% | 2% | 45% | -- |
| Hispanic/Latinx | 21% | 28% | 45.% | 22% |
| ஏனையோர் | 2% | -- | 5% | -- |
| தெரிவிக்கப்படவில்லை/தெரியவில்லை | 0.9% | 0.6% | 3% | -- |



***இந்தச் சொற்பதங்கள் விஞ்ஞான ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்ட சொற்பதங்கள் ஆகும். சில பங்கேற்பாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட இனக்குழுரீதியான அல்லது இனரீதியான பின்புலத்தை அடையாளமாகக் காட்டியிருந்தனர்..*

Moderna தடுப்புமருந்து ஆய்வு ஐக்கிய அமெரிக்காவில் நடத்தப்பட்டிருந்தது, Pfizer-BioNTech தடுப்புமருந்து ஆய்வு ஐக்கிய அமெரிக்கா, ஆர்ஜென்டினா, பிரேசில், ஜெர்மனி, தென்னாபிரிக்கா, துருக்கி ஆகிய நாடுகளில் நடத்தப்பட்டிருந்தது.

Johnson and Johnson ஆய்வு, ஐக்கிய அமெரிக்கா, பிரேசில், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலும் லத்தீன் அமெரிக்காவில் உள்ள ஐந்து நாடுகளிலும் (ஆர்ஜென்டினா, சிலி, கொலம்பியா, பெரு மற்றும் மெக்சிகோ) நடத்தப்பட்டிருந்தது.

அமெரிக்கா, பெரு மற்றும் சில்லி ஆகிய நாடுகளில் 88 மையங்களில் நடந்த அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி ஒருங்கிணைந்த ஆய்வுகளின் பகுப்பாய்வு.

## இனக்குழுரீதியாக மற்றும் இனரீதியாக வேறுபட்டிருந்த குழுவினரில் இந்தத் தடுப்புமருந்துகள் ஒரே மாதிரியாகச் செயல்பட்டனவா?

ஆம் COVID-19 நோயிலிருந்து பாதுகாப்பதில் இந்தத் தடுப்புமருந்துகள் வினைத்திறனானவையாக இருந்தன என்பதை அந்தப் பரிசோதனைகள் காட்டியிருக்கின்றன. வேறுபட்ட இனக்குழுரீதியான மற்றும் இனரீதியான பின்புலத்தைக் கொண்டிருந்தவர்களில் அவை சமமான வினைத்திறனுடன் செயல்பட்டிருந்தன.

ஏப்ரல் 14 நிலவரப்படி, சீனா, மெக்ஸிகோ, பங்களாதேஷ் மற்றும் தென்னாபிரிக்கா உள்ளடங்கலாக உலகெங்கிலும் உள்ள 825 மில்லியன் பேர் வெவ்வேறான COVID-19 தடுபபுமருந்துகளை ஒரு தடவை பெற்றிருக்கின்றனர்.



**இந்த அறிக்கை உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்! ஒலிப்பதிவாக அல்லது வீடியோவாகப் பதிவுசெய்வதற்கு இந்த ஆவணத்தைப் பயன்படுத்தும்படி அல்லது மேலதிகமான மொழிகளில் இதை மொழிபெயர்த்து ஏனையோருடன் பரவலாகப் பகிரும்படி உங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து மூலத்தைக் குறிப்பிட மறக்காதீர்கள்: Women's College Hospital, OCASI, TAIBU Community Health Centre மற்றும் Refugee 613.**

**ஏப்ரல் 14, 2021 நிலவரப்படி துல்லியமானது.**

**இந்தச் செய்தியறிக்கையிலுள்ள தகவல்கள் கனேடிய மருத்துவர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. Meb Rashid MD, துணைப் பேராசிரியர்,ரொறன்ரோப் பல்கலைக்கழகம்; Vanessa Redditt, MD, விரிவுரையாளர், ரொறன்ரோப் பல்கலைக்கழகம்; மற்றும் Isaac I. Bogoch, MD, இணைப் பேராசிரியர்,ரொறன்ரோப் பல்கலைக்கழகம்**

{REFUGEE}613 · TAIBU COMMUNITY HEALTH CENTRE (BE IN GOOD HEALTH) · OCASI Ontario Council of Agencies Serving Immigrants · WCH WOMEN'S COLLEGE HOSPITAL Healthcare | REVOLUTIONIZED

pchs 30 Serving Diverse Communities · CSALC CHINESE AND SOUTHEAST ASIAN LEGAL CLINIC · MCIS LANGUAGE SOLUTIONS · Occupational Health Clinics for Ontario Workers Inc.